# 02-01-2025 செய்தி

## 2023-24- இல் பள்ளி மாணவர் சேர்க்கை 37 லட்சம் சரிவு

- இது 2023-24-ஆம் ஆண்டில் 37 லட்சம் சரிந்து 24.80 கோடியாக உள்ளது. இந்தக் காலத்தில் மாணவர்களின் சேர்க்கை 21 லட்சமும், மாணவிகளின் சேர்க்கை 16 லட்சமும் குறைந்தன.
- 2023-24-இல் நடைபெற்ற மொத்த மாணவர் சேர்க்கையில் சுமார் 20 சதவீதம் பேர் சிறுபான்மையின மாணவர்கள். அவர்களில் 79.6 பேர் முஸ்லிம்கள், 10 சதவீதம் பேர் கிறிஸ்தவர்கள், 6.9 சதவீதம் பேர் சீக்கியர்கள், 1.3 சதவீதம் பேர் சமணர்கள், 0.1 சதவீதம் பேர் பார்சிகள், 2.2 சதவீதம் பேர் பௌத்தர்கள்.
- தேசிய அளவில் யுடிஐஎஸ்இ+ தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 26.9 சதவீத மாணவர்கள் பொதுப் பிரிவினர், 18 சதவீதம் பேர் பட்டியலினத்தவர். 9.9 சதவீதம் பேர் பழங்குடியினர். 45.2 சதவீதம் பேர் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்.

## ‘நீல கொடி சான்று’ என்றால் என்ன?

- உலகம் முழுவதும் கடற்கரை பகுதிகளின், சூழல் தரத்தை மேம்படுத்த, சுற்றுச்சூழல் கல்விக்கான பவுண்டேஷனான, எப்.இ.இ., வாயிலாக கடற்கரைகளுக்கு, ‘நீல கொடி’ சான்றிதழ் வழங்கப்படுகிறது.
- இந்த அமைப்பில், இந்தியா உள்ளிட்ட, 77 நாடுகள், 65 அமைப்புகள் உறுப்பினர்களாக உள்ளன. சுற்றுச்சூழல் மேலாண்மை, சுத்தமான மணல், சுற்றுலா பயணியருக்கான வசதிகள் உள்ளிட்ட, 33 தகுதி நிலைகள் அடிப்படையில், நீல கொடி சான்றிதழ் வழங்கப்படும்.
- தமிழகத்தில் கோவளம் உள்பட நாடு முழுவதும், 13 கடற்கரைகளுக்கு இந்த சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. உலக அளவில் பல்வேறு நாடுகளுக்கு செல்லும், சுற்றுலாப் பயணியர், இந்த தரநிலை அடிப்படையில் கடற்கரைகளை தேர்ந்தெடுத்து செல்வர். இதனால், உள்ளூர் அளவில் இருக்கும் கடற்கரைகள், சர்வதேச அளவில் கவனத்தை ஈர்க்கும் நிலை ஏற்படும்.

**நிபந்தனைகள்**

- கடற்கரை நில பகுதியில், சாலைக்கு வெளியில் எவ்வித மேம்பாட்டு பணிகளையும் செய்யக் கூடாது.
- கடல் ஆமைகள் முட்டையிடும் இடம், ஆமைகள் வந்து செல்லும் பகுதிகளில், எவ்வித இடையூறும் ஏற்படக் கூடாது.
- இத்திட்டத்துக்காக எந்த விதத்திலும் நிரந்தர சாலைகள் அமைக்க கூடாது.
- சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை மட்டுமே, இங்கு நடக்கும் பணிகளுக்கு பயன்படுத்த வேண்டும்.
- நீல கொடி சான்றிதழுக்கு விண்ணப்பிக்கும் அரசு துறைகள், நீடித்த கடலோர மேலாண்மைக்கான தேசிய மையத்துடன், புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.
- கடற்கரை பகுதிகள் தவிர்த்து, சாலை போன்ற இடங்களில் தான் கழிவறைகளை கட்ட வேண்டும்.
- கடற்கரையின் இயற்கை எழில் தோற்றத்தை, எந்த விதத்திலும் மறைக்கும் பணிகளை செய்யக் கூடாது.
- கடற்கரையின் மணல் பகுதி, எந்த விதத்திலும் பாதிக்காமல் பணிகள் செய்யலாம்.
- கடற்கரை பகுதிகளை, குறிப்பிட்ட கால இடைவெளியில் முறையாக சுத்தப்படுத்தும் பணிகளை செய்ய வேண்டும்.
- இவ்வாறு கடற்கரை ஒழுங்குமுறை குழுமம் தெரிவித்துள்ளது.